
# ஆத்மாவின் புண்



அஸாத் எம் ஹனிபா

என்

பிறப்புக்கு

முன்பும்

பின்னரும்

எனக்கு கருப்பையாக

இருந்த

இருந்து

கொண்டிருக்கின்ற

**உம்மாவுக்கும்**

**வாப்பாவுக்கும்!**

# ஆத்மாவின் புண்

**(கவிதைகள்)**

## அஸாத் எம். ஹனிபா

**வெளியீடு :**

**இல. 48/5/A, ஆசிரி மாவத்தை,**

**களுபோவில,**

**தெஹிவளை**

**இலங்கை**

TITLE : **AATHMAVIN PUNN**
(Poems)

AUTHOR : **AZAATH M HANIFFA** (MBBS)

FIRST EDITION : 2012 NOVEMBER

COPYRIGHT : **Azaath M Haniffa**
48/5/A, Aasiri Mawatha,
Kalubowila, Dehiwala.
Sri Lanka.
Tel : 0717718787

COVER DESIGN BY : Kalaiwathi Kaleel

PRINTER : U D H Compuprint
51/42, Mohideen Masjid Road,
Colombo - 10.
Tel : 0112 382481, 0773 665234

ISBN : 978-955-54758-0-8



## உள்ளடக்கம்

| | |
|---|---|
| எனக்குத் தெரியாதவை | 01 - 03 |
| பிணம் தின்னும் சாஸ்திரம் | 04 - 05 |
| எஞ்சியுள்ள எச்சங்கள் | 06 - 07 |
| வித்துடல்கள் | 08 - 10 |
| தலைவரின் தவிப்பு | 11 - 14 |
| அனுதாபச் செய்தி | 15 - 16 |
| எப்போது வருவாய் | 17 - 19 |
| கலையாத கருவும் மரிக்காத சிசுவும் | 20 - 22 |
| முதுமை | 23 - 24 |
| ஊமையின் உயில் | 25 - 26 |
| நிராயுதபாணி | 27 - 28 |
| வாய்பேசும் முலையூட்டி | 29 - 31 |
| நீ தேடும் நான் | 32 - 33 |
| எனது அமைச்சு | 34 - 35 |
| காணிக்கை | 36 - 37 |
| ஆத்மாவின் புண் | 38 - 40 |
| கைவரிசை | 41 - 41 |
| போலிச் சித்திரம் | 42 - 44 |

| | |
|---|---|
| என் முந்தானை முடிச்சு | 45 - 46 |
| உலகப் போர் | 47 - 49 |
| செருப்புச் சோடி | 50 - 51 |
| உனது நோய் | 52 - 53 |
| தடுப்பூசி | 54 - 56 |
| மணியோசை | 57 - 58 |
| 26. 12. 2004 | 59 - 60 |
| வெற்றுடம்பு வீரர்கள் | 61 - 62 |
| தாய்ப்பால் | 63 - 63 |
| வெறுத்துப்போன வெள்ளம் | 64 - 65 |
| அப்பாவி வானம் | 66 - 67 |
| அன்புள்ள நோன்பு | 68 - 70 |
| விஷ ஆணி | 71 - 72 |
| தள்ளுவண்டி | 73 - 74 |
| போர் உழுத ஊர் | 75 - 78 |
| என் இருப்பு நீ | 79 - 84 |




## வாழ்த்துரை

என் அன்பிற்கும் மதிப்பிற்கும் உரிய அஸாத் எம். ஹனிபா அவர்களின் "ஆத்மாவின் புண்" என்ற கவிதைத் தொகுப்பிற்கு ஆசி வழங்குவதில் பெரும் மகிழ்ச்சியடைகின்றேன்.

மனித சமூகத்தில் வாழும் ஒவ்வொரு மனிதனும் தன்னையும் தன் சமூகத்தையும் உய்த்தறிந்து பார்க்காவிட்டால் தானும் அழிந்து தன் சமூகமும் அழிந்து விடும் என்ற கருத்தை ஆழமாக எடுத்தியம்புகிறது, இந்த "ஆத்மாவின் புண்" கவிதைத் தொகுப்பு.

மனிதனையும் அவன் பெறுமானங்களையும், அவன் நடத்தைக் கோலங்களிலுள்ள சிறப்பினையும், மொழியில் உள்ள தூய்மையினையும், செயலிலுள்ள புண்ணியத்தையும் சமூகமே நிச்சயிக்கிறது. ஏனெனில் மனிதன் பிறக்கமுன்பதாகவே சமூகம் பிறந்திருக்கிறது. இதனால், அவன் அதனோடு இசைவாகி வாழ்ந்து விடுகிறான். இவ்வாறு சமூகத்தோடு சுமுகமாக மனிதன் ஒன்றுபடும் போது தன்னையும் தன் சமூகத்தையும் பிரித்துப் பார்க்கத் தவறுகிறான்.

இந்நிலையில் சமூகத்தின்பால் நின்று மனிதனையும் மனிதன்பால் நின்று சமூகத்தையும் எடை போட்டுப் பார்ப்பது சமூகமாற்றத்திற்கு அவசியமாகின்றது. அதனைத்தான் "ஆத்மாவின் புண்" என்ற இந்த கவிதை நூல் புரிந்துள்ளது.

வைத்தியக் கலாநிதியான அஸாத் எம். ஹனிபா, எழுதியிருக்கும் கவிதைகளில் உள்ள கருத்துக்கள் உயர்வான சிந்தனையை ஊக்குவிக்கின்றன. அவை ஆழமாக மனதில் பதிந்து சமூக மேம்பாட்டிற்கான உத்திகளையும் வழிமுறைகளையும் பற்றி எம்மைச் சிந்திக்க வைக்கின்றன.

ஒரு கவிதை வரியினூடாக உலகத்தை உரித்துக் காட்டுவது போல் அவர் எழுதுவது சமூகம் பற்றிய உறுதியான இலட்சியத்தை அவர் கொண்டுள்ளார் என்பதையே எடுத்துக் காட்டுகிறது. சமூக மாற்றத்தை அவர் விளைகின்றார் என்பதை விட அதற்கு அவர் ஏங்குகிறார் என்பதே பொருத்தம். இருப்பதெல்லாம் நன்மையானவையே என எண்ணாமல், இருப்பவை இன்னும் சமூகத்திற்கு ஏற்புடையதாக புதுப்பிக்கப்பட வேண்டும் என்கிறார் அஸாத்.

இதய ஊற்றுக்களாக வரும் அவரது கவிதைகள் இலகுவான மொழியில் எவருக்கும் விளங்கும் வகையில் இருப்பதனால் ஒருமுறை வாசித்தால் பல முறை வாசித்தது போன்றதோர் உணர்வை என்மீது எற்படுத்தி விடுகிறது.

அஸாத் அவர்கள் மேலும் மேலும் பல நூறு கவிதைகளைப் படைத்து சமூகம் போற்றும் ஒரு பெரும் கவிராயராக வர வேண்டும் என மனமார வாழ்த்துகிறேன்.

அவரது கவிதைகளால் சமூகம் மிகுந்த பயன் பெறும் என்பது எனது திடமான நம்பிக்கையாகும்.

பேராசிரியர்
**எம். எல். ஏ. காதர்**
ஸ்தாபக உப வேந்தர்
தென்கிழக்கு பல்கலைக் கழகம்
இலங்கை
2012.09.11



## அணிந்துரை

நவமணி தேசிய வார ஏட்டில் என் பணி! சிறுகதைகள், கவிதைகள், உருவகக் கதைகள் உள்ளிட்ட இலக்கியப் பகுதி என் பொறுப்பில்!

என் கரம் வந்தடையும் கவிதைகள், சிறுகதைகளைப் பார்வையிட்டு அதனைச் செப்பம் செய்து பொருத்தமான ஓவியங்களையும் வரைந்து பிரசுரிப்பதே என் கடமை. அந்த வகையில் இந்த நாட்டின் புகழ் மிக்க எழுத்தாளர்களதும் வளர்ந்து வரும் மற்றும் முதன் முதலில் இலக்கியத்தடம் பதிக்கும் எழுத்தாளர்களதும் நூற்றுக் கணக்கான படைப்புக்களைப் பிரசுரம் செய்த மனத்திருப்தி எனக்கு.

பொதுவாக, பிரசுரத்திற்காக அனுப்பப்படும் ஆக்கங்களில் ஒரு வரியையாவது, ஒரு சொல்லையாவது, எழுத்தையாவது திருத்தாமல், மாற்றாமல் நீக்காமல் பிரசுரித்ததில்லை. ஏனோ தெரியாது! என் கரம் எட்டும் ஆக்கங்களில் பூரண திருப்தி கொள்வதில்லை நான். அவற்றை அடித்துத் திருத்துவதில் ஓர் ஆனந்தம். வேறொரு வகையில் இதனை நாசூக்காகக் கூறுவதாகவிருந்தால் பட்டை தீட்டுதல், மெருகூட்டுதல் என்றும் பகரலாம். சில சிறுகதைகளின் இறுதிப் பந்தியைக் கூட ஒரே வெட்டாக வெட்டி விடுவேன். கவிதைகளுக்கும் இதே விதமான தண்டனைகள் வழங்கியிருக்கிறேன். மரபுக் கவிதையெனில் யாப்பிலக்கணத்தில் கண்ணும் கருத்தும் (தலைக்கணம் ஏதுமில்லை) புதுக்கவிதையெனில் படிமம், குறியீடுகளில் மிக அவதானம்.

சொல்லும் சொல்லும் நோக்கும், சொல்லப்படும் விதமும் எனது கடுமையான கண்டிப்பான கவனத்துக்குட்படுத்தப்படும். அதேவேளை கவிதை, கவிதையாக (வெறும் வசனக் கோவையாக அல்லாது) தனித்துவமாக, கவித்துவம் சற்றும் குன்றாததாக அமைய வேண்டுமென்பதில் விடாப்பிடி, அழுங்குப்பிடி எனக்கு.

எமது பத்திரிகைக்கு அனுப்பப்பட்டு, என்னால் நிராகரிக்கப்பட்ட பல கவிதைகளும் சிறுகதைகளும் ஏனைய சில பத்திரிகைகளில் பிரசுரமாகியிருக்கின்றன, எவ்வித அடித்தல் திருத்தலுமின்றி. (செம்மை பார்க்கப்படாமல்) இது என் தவறோ அவர்களின் தவறோ... வாசகர்களின் சிந்தனைக்கே விட்டு விடுகின்றேன். அதேவேளை, நவமணியில் பயின்றவர்கள, பயிற்சி பெற்றவர்கள், எழுதப் பழகியவர்கள் பலர் இன்று இந்நாட்டின் புகழ் மிக்க படைப்பாளிகளாகத் திகழ்ந்து வருகின்றார்கள். இவர்கள் படைத்தளிக்கும் ஆக்கங்கள் எல்லாப் பத்திரிகைகளிலும் வெளிவருகின்றன. ஒரு சிலர் நூற்களைக்கூட பிரசவித்துள்ளனர். துரதிஷ்டவசமான விடயம் என்னவெனில் நவமணியால் வளர்ந்த ஒரு சிலர் தற்போது நவமணியை மறந்து விட்டமையே!

கவிஞர் (தாராளமாக அழைக்கலாம்) அஸாத் எம். ஹனீபாவின் கவிதைகள் என் கரம் எட்டியதும் வேகம் வேகமாக (மேலோட்டமாக)ப் படித்துப் பார்ப்பேன். பின்னர் நின்று நிதானித்து எனக்கே உரிய தனிப்பாணியில் – கவியரங்குகளில் பாடும் பாணியில் படித்துப் பார்ப்பேன். வாய்விட்டல்ல. மனன வாசிப்பு! உண்மையைச் சொல்வதாக இருந்தால் ஹனீபாவின் கவிதைகள் எனக்குப் பிடித்துப் போய் விடுகின்றன. இவரது கவிதைகளின் ஒவ்வொரு வரியும் ஒவ்வொரு சொல்லும் என்னைக் கவர்ந்து விடுகின்றன. வார்த்தை லாவண்யம் என்னை ஆட்கொண்டு விடுகிறது. இவரது கவிதைகளை நவமணியில் பிரசுரித்து விட வேண்டும் என்ற வேட்கை உந்தும்...

"உங்கள் கவிதைகளை நூலாக்கினால் என்ன?" என்ற ஆலோசனையை ஹனீபாவுக்கு வழங்கியவனும் நான்தான். "நூலாக்கும் அளவுக்கு என் கவிதைகள் என்ன அவ்வளவு சிறந்தவையா?" என்று அவர் சிந்தித்தது அவர் முகபாவத்தின் மூலம் தெரிந்தது. ஆயினும் எனது நச்சரிப்பு காரணமாக ஹனீபா தனது கவிதைகளை அச்சு வாகனம் ஏற்றி விட்டார்.



இனி அந்த வாகனம் "மக்கர்" இல்லாமல் ஓடும் என்பது எனது துணிவு. உண்மையில் ஹனீபாவின் கவிதைகளை, கவிதைகள் என்ற வரையறைக்குள் (இலக்கணத்துள்) அடக்கலாம். இதை உறுதியாகக் கூறுவேன் நான். நாட்டில் புற்றீசல்கள் போல் வெளியாகும் கவிதைகளையும் கவிதை நூல்களையும் பார்க்கும் போது இவ்வுண்மை புலப்படுகின்றது. நமது நாட்டைப் பொறுத்தவரை கவிஞர்களே அதிகமாயுள்ளனர். சிறுகதைகள், உருவகக் கதைகள், நெடுங்கதைகள், நாவல்கள் முதலியன எழுதுபவர்கள் குறைவு. இதற்குக் காரணம் அவர்களது சிந்தனைப் பற்றாக்குறை என்று கூறுவதை விட, சோம்பேறித்தனம் என்றும் கூறி வைக்கலாம்.

இரண்டு வரி முதல் எட்டு வரி வரை எழுதி விட்டால் (எண்சீர் விருத்தமல்ல...) ஒரு கவிதை முளைத்து விடுகிறது. "ஏன்... மண்டையைப் போட்டுக் குடைந்து மணிக்கணக்காக முயன்று நாட்கணக்காக உழைத்து ஒரு சிறு கதையையோ நாவலையோ படைக்க வேண்டும்" என்று இவர்கள் நினைக்கிறார்கள்.

கவிதை எழுதுவது இலகுவான ஒன்றுதானே. (?) எனத் தங்களுக்குத் தாங்களே ஒரு வேலியைக் கட்டிக் கொண்டு எழுதித்தள்ளுகிறார்கள். அதனால்தான் இன்றைய கவிதைகள் அள்ளித் தெளித்த அவசரக் கோலங்களாக அமைந்து விடுகின்றன.

புரட்சிக்கவி பாரதியை விடுதலைக்கவி எனலாம் அவர் எழுதிய சூழல் அது. ஹனீபாவையும் விடுதலை வேட்கைக்கவி என்றால் தப்பில்லை. புலிப் பயங்கரவாதத்திலிருந்து விடுதலை பெறவே அவர் கவிதை படைத்துள்ளார்.

புதுக்கவிதைக்கேயுரிய புதிய புதிய (நவீன) பல்வேறுவிதமான கருத்துக்களைக் கையாளக்கூடிய வல்லமையுள்ளவராகத் திகழ்கின்றார் ஹனீபா. பல சான்றுகளைக் கூறலாம் உதாரணமாக

**'எனக்குத் தெரியாதவை'** என்னும் கவிதையில்

வீட்டை விட்டு
வெளியேறியது
உன் கடைசிக் காலடி எனப்
புரிந்திருந்தால்
உன்னை இழுத்துக்
கட்டி வைத்திருப்பேன்
என் கண்களுக்குள்

"கட்டி வைத்திருப்பேன் என் கண்களுக்குள்" என்ற வார்த்தையைப் படித்த போது "கண்ணும் கருத்தும்" என்ற சொற்றொடர்தான் ஞாபகம் வருகிறது." கண்போல் காத்து எனும் பொருள்படும் அர்த்தபுஷ்டியான சொல் இது.

அவர்கள்
உறவுகள் இல்லாத
மயான விடியலுக்காக
உயிர்களை உரசிக்
கொண்டிருக்கும் நேரமிது

என்ற வரிகள் மூலம் விடுதலைப் போராட்டத்தின் விளைவை ஆரூடம் கூறி வைக்கிறார் கவிஞர்.

**'பிணம் தின்னும் சாஸ்திரம்'** எனும் கவிதையில்

குருதிப் பிரளயத்தில்
அமிழ்ந்து தத்தளித்த
கைக்குழந்தைகளைக் கூட
சுட்டுப் பொசுக்கிய
ஈனச் செயலர்தான்
தியாகிகளாய்



நாளை
வீரச்சாவு அடைவர்

என்ற வரிகளின் மூலம் பயங்கரவாதத்தின் ஈவிரக்கமற்ற தன்மையும் கொலைகள் செய்தால் தியாகியாகலாம் என்ற போலித் தத்துவத்தையும் தோலுரித்துக் காட்டுகிறார் கவிஞர்.

**வித்துடல்கள்** என்ற கவிதை கூறுவதென்ன?

ஆயுதம் உனக்கு
ஊன்று கோலாய் உள்ளவரை
என்னை
ஊமையாக்கிக் கொண்டிரு!
தலையில்
அடிக்கடி குட்டு!
நான் குனிந்து கொள்கிறேன்.
வாயை இறுகப் பூட்டு!
நான் மூடிக் கொள்கிறேன்
காதுகளை ஒட்டு!
நான் அடைத்துக் கொள்கிறேன்.

**தலைவரின் தவிப்பு** என்ற கவிதை இவ்வாறு கூறுகிறது

என் கொள்கை வளர்க்க
வாக்குச் சேர்த்தவர்களெல்லாம்
இன்று ஆளுக்கொரு
சாக்குப் போக்குடன்
திக்குத் தெரியாது
விசை இசைக்கின்றார்கள்

என் பெயரைச் சொல்லி
இச் சமுதாயத்திற்கு
கொள்ளி வைக்கும்
ஆட் கொல்லியில் போகிறார்கள்
ஆனபலன் ஒன்றுமில்லை
அவர்களின்
வீங்கிய வங்கிக்
கணக்குகளைத் தவிர!

**'ஊமையின் உயி'லில்**
உன் மூளையே மூலையில்
வீசி எறிந்திருக்கும்
என் இதயத்தை
பத்திரப்படுத்து – இனி
அது உன்னில் சுருங்கி
என்னில் விரியட்டும்
உயிரே நீ
சுவாசித்து
என்னை வாழ விடு
(மருத்துவ மனை)

கவிஞர் ஒரு மருத்துவராக இருப்பதனால் இப்படிச் சிந்தித்தாரோ? படிமமும் குறியீடும் கவிஞரது பெரும்பாலான கவிதைகளில் விரவிக் கிடப்பதை அவதானிக்க முடிகிறது.

**'போலிச் சித்திரம்'** கவிதை போலிகளை தோலுரித்துக் காட்டுகிறது.
ஐவேளை தொழுது
மக்கா சென்று
மார்பு தட்டி



தன்பாட்டில்
வாழ்ந்து விட்டால்
கலிமாவைக்காப்பாற்றுவது
யாரடா நண்பா?
கனப் பொழுதேனும்
காத்திருக்க நேரமில்லை
நியாயத்தின் பாதை
திறந்தாவது
பறந்து வா

**'என் முந்தானை முடிச்சு'**
மாணவருக்கு
செருப்பு ஜோடி
அன்பளிப்பு செய்து
வர்ணப்படம்
அடிக்குறிப்புடன்
பிரசுரிக்க வேண்டும்
என் வாக்குறுதிகளே
இனி வானத்திலே
தங்கி நிற்கும்
பெரும் தூண்கள்

**'தாய்ப்பால்'**
தாலிக் கொடி வரவால்
தவிடு பொடியான
தொப்புள் கொடி உறவுகள்
(அருமையான வரிகள்)

பால் கொடுத்து
வளர்த்தவள்
பாழ் வீட்டில்!
கால் வைத்து
வந்தவனோ
மேல் மாடித் தட்டில்!

**'அப்பாவி வானம்'**

சினைகளற்ற
நீர்முட்டைப் பைகள் போல்
உஷ்ண தொட்டில்களில்
உறங்கும்
இந்தச் சிறுசுகளின்
கனாக்களில் கருக்கட்டல்

**'அன்புள்ள நோன்பு'** கவிதை கிண்டல் மயமானது

தற்காலிகமாக பள்ளிகள்
நிரம்பி வழியும் நடுநிசியில்
நின்று வணங்கவும்
இவர்களுக்கு இயலும்
வீதியெங்கும்
யாசகர் படையணிகளாய்
பெண்மணிகள்
அணிவகுத்துச் சென்று
முகமூடி களைவர்

**'தள்ளு வண்டி'**

காணிப்பத்திரங்கள்
கவனமாய் வைத்திருந்தோம்
ஆனால்



பெரியவர் வந்து
அங்கு
பழைய சிலைகளை
தோண்டி எடுப்பதாய்க் கூறி
எமது
பூர்வீக நிலத்தைக்
காணவில்லை என்றார்

**'என் இருப்பு நீ'** எனும் கவிதை மனைவி பற்றியது

குறைகள்
எல்லாம் கழுவி
நிறைகள்
எங்கும் செருகி
புடம் போடும்
புதுவித கருவி நீ

புயலில் கூட
அசையாத மரம்
உன் விரிந்த
கரம்
(இந்த வரி கவிப் பேரரசு
வைரமுத்துவின் பாணியை
நினைவூட்டுகிறது)

இத்தனை நாளாய்
என்னில்
புழுதிபட விடவில்லை
உன்
பார்வை எனும்
போர்வை

பூகம்பத்திலும்
வெடிக்கா மலை
எந்நிலையிலும்
உன் மனோ நிலை
உன் குதிரை வலு
விழிகளுக்குள்
ஆயுட் கைதியா நான்?
எத்தனை
இடிதான்
விழுந்தாலும்
உன் மடிதான்
என்
மரணப் படுக்கை

(சிருங்கார ரசம் ததும்பும் அதே வேளை உணர்ச்சி வடிவிலான கவிதை இது)

மொத்தத்தில்
கவிதையைக் கவிதையாய் கையாளுகிற வல்லமையுள்ள நல்ல கவிஞரின் நல்ல நூல் இது. நல்ல கருத்துக்களே நூலில் விரவிக் கிடக்கின்றன எனத்துணிவேன்

மேலும் இத்தகைய நூல்கள் படைத்தளிக்க என் மனப்பூர்வமான வாழ்த்துக்கள்

**கலைவாதி கலீல்**
முன்னாள் உப பீடாதிபதி
கவிஞர்– எழுத்தாளர்
E-mail :kalaiwathykaleel@gmail.com

148, பொல்கொட்டுவ வீதி,
பின்வல, பாணந்துறை



## ஆத்மானுபவம் !

என் ஆத்மாவின் அனுபவத்தை உங்களோடு பகிர்ந்துகொள்ள விரும்புகிறேன்.

“ஏன் இந்த முயற்சி?” என ஒரு சிலர்.

மற்றுமொரு சாரார், “மருத்துவம் சம்பந்தமான நூலா?” எனவும் வினவினர்.

என்னை அறியாமலேயே என் மனநிலைக்கு அப்பாற் சென்றுவிட்டதன் விளைவாக இதனை வெளியிடுவதாக அவர்களுக்கு கூறினேன். இது – மன உளைச்சலையும் என் உளக்கிடக்கையையும் இறக்கி வைக்கும் ஒரு தட்டு.

கவிதை எழுத வேண்டும் என்ற எண்ணக் கரு என்னுள் முகிழ்விட்டது எவ்வாறு என்று என்னால் யூகிக்க முடியவில்லை. கவிதை எழுத வேண்டும், இலக்கியம் படைக்க வேண்டும் என்ற உந்துதல் இயல்பாகவே என்னில் தொற்றிக் கொண்டுள்ளது என்றுதான் கருதுகிறேன்.

வைத்தியர்கள். மருத்துவர்கள், வைத்திய கலாநிதிகள் பலர் இந்த நாட்டின் புகழ்பூத்த இலக்கியவாதிகளாக மிளிர்ந்துள்ளார்கள், இன்றும் கூட...

அந்த வகையில் மருத்துவனாகிய என்னாலும் இலக்கியம் படைக்க முடிகிறது என்பது எனக்கு பூரண திருப்தியைத் தருகிறது. அதையிட்டு இறும்பூதெய்துகிறேன்.

எனது முதலாவது ஆக்கம் பத்திரிகையில் வெளிவந்தபோது நான் அடைந்த மகிழ்ச்சி “ஈன்றபொழுதில் பெருதுவக்கும் தாயை”யே நிகர்த்திருந்தது.

எனது முதலாக்கம்

எனக்குள் ஒழிந்திருந்த மறுமுகத்தை காட்டும் கண்ணாடி.

மலடிக்கு நிகழும் தலைப்பிரசவம்.

என் சிறுவயது முதலே சுற்றுப்புறச் சூழலின் அதிதீவிர தாக்கத்தினால் பாதிக்கப்பட்டேன். கட்டுப்பாட்டை மீறிய கணத்தாக்கங்களின் கிறுக்கல் சித்திரம் வரிகளாய், கவிகளாய் இன்று தொகுப்பாயிற்று.

இனப்பிரச்சினை, இனக் கலவரம், இனச் சுத்திகரிப்பு, இந்திய இராணுவம், கொலைக்களம், சமாதானம் என நீண்டு செல்லும் பட்டியலில் மூன்று தசாப்த யுகத்தின் ஒவ்வொரு நகர்வையும் என்னால் நுகர முடிந்துள்ளது.

பாடசாலைக்கு செல்லும் நாட்களில் சாலையோரங்களில் புழுக்கள் பரவிய காகம் கொத்திய அநாதைச் சடலங்கள்.

ஆட்கடத்தல், விமானக் குண்டுத் தாக்குதல் என்பவற்றிலிருந்து தப்பிய என் வாலிபம். அதன் பெரும் பகுதியை இராணுவச் சோதனைச் சாவடிகளில் செலவிட்டது.

என் இளமனதில் விழுந்த ரணமான கீறல்களை சுகப்படுத்தவும் என் தீராத மனநோய்க்கு ஆறுதலளிக்கவும் இத்தொகுப்பை வெளியிடுகிறேன்.

என் வாழ்க்கையின் பல்வேறு பட்ட படித்தரத்தின் மாறுபட்ட சிந்தனா சக்தியால் எழுதப்பட்ட இக் கவிதைகள் அனைத்தும் தேசிய நாளேடுகளான தினகரன், வீரகேசரி, நவமணி வார இதழ் மற்றும் சஞ்சிகைகளில் பிரசுரிக்கப்பட்டவை.

இத்தொகுதியை வெளியிடுவதற்கு எனக்கு மிகவும் பக்கபலமாகவிருந்து அரும்பாடு பட்ட என் மதிப்பிற்குரிய கலைஞர், சிரேஷ்ட எழுத்தாளர் கலைவாதி கலீல் அவர்களுக்கு என்றும் நான் கடமைப்பட்டுள்ளேன். முன்னுரை தந்து அட்டைப்படம் அமைத்து, புத்தக வடிவமைப்பு செய்த அன்பின் கலைவாதி கலீல் அவர்களுக்கு மீண்டும் என் மனமார்ந்த நன்றிகள்.

என் இலக்கியப் பயணத்தின் உந்துசக்தியாக விளங்கிய என் பாடசாலை ஆசிரியர்களான மர்ஹூம் கவிச்சுடர் அன்பு முகையதீன், யூ.எல். ஆதம் பாவா மற்றும் 'புதுச் சுவர் ஆசிரியர் மு. மு. மு. பாஸீல் (இலங்கை வங்கி), நவமணி பத்திரிகையின் ஆரம்ப ஆசிரியர் மர்ஹூம் எம்.பி.எம். அஸ்ஹர், நவமணியின் தற்போதைய ஆசிரியர், முஸ்லிம் மீடியா போரத்தின் தலைவர் என்.எம். அமீன் ஆகியோரை நன்றியுடன் நினைவு கூர்கிறேன். திறம்பட அச்சிட்டு உதவிய மருதானை "யூ.டீ.எச்" பதிப்பகத்தாருக்கு என் வாழ்த்துக்கள்.

ஆக்கபூர்வமான விமர்சனம் செய்யும் என் மனைவி ஸீனத், மற்றும் பிள்ளைகளான அத்தீக், அயாஷ், அலி மற்றும் இத் தொகுதியை வெளியிட உதவிய அனைத்து உள்ளங்களுக்கும் என்றுமே என் உபகாரம் உரித்தாகும்.

**அஸாத் எம். ஹனீபா**
48/5/A, ஆசிரி மாவத்தை,
களுபோவில, தெஹிவளை,
இலங்கை.

drazaath_mhm@yahoo.com
www.poemazaath.blogspot.com

# எனக்குத் தெரியாதவை

நீ
தூங்கிக் கொண்டிருந்தது
இறுதித் தருணம் என
எனக்குத் தெரிந்திருந்தால்
உன்னை
எழுப்பி விட்டிருப்பேன்!
எங்காவது
ஓடிச் சென்று
உயிர் பிழைத்துக்கொள் என்று
அந்த எறிகணைகள்
வந்து விழுவதற்குள்!

வீட்டை விட்டு
வெளியேறியது
உன் கடைசிக் காலடி எனப்
புரிந்திருந்தால்
உன்னை இழுத்துக்
கட்டி வைத்திருப்பேன்
என் கண்களுக்குள்!

நீ
என்னோடு பேசியவை
உன்
இறுதி மரணசாசனம் எனத்
தெரிந்திருப்பின்
உன்னை
பேசவே விடாமல்
கைக்குள்
பொத்தி வைத்திருப்பேன்!

கடைசியான
உன்
மௌன சைகைகள்
எனக்கு விளங்கியிருப்பின்
உன்
மீது விழுந்த
குண்டை
என்
தலையில் தாங்கியிருப்பேன்!

உன்னோடு கழித்த
அந்திநேரப் பொழுது
இனி வராது என்று
விளங்கியிருந்தால்
விடியாமல் இருக்க
ஆண்டவனுக்கு
விண்ணப்பம் அனுப்பி
ஒரு வழி
செய்திருப்பேன்!

அந்த
பிஞ்சு முகத்தில்
சப்பாத்துக் காலடிகள்
இரத்த ஜாலம் பூசியது
புரிந்திருந்தால்
நான்
செத்தாவது
அந்தக் கால்களைத்
தறித்திருப்பேன்
வாள் கொண்டு!



அவர்கள் -
உறவுகள் இல்லாத
மயான விடியலுக்காக
உயிர்களை உரசிக்
கொண்டிருக்கும் நேரமிது!

இத்தனைக்கும்
இது-
எனது
கடைசி எழுத்துக்களா
என்பது
அவர்களின்
துப்பாக்கிகளுக்கு
மட்டுமே
தெரிந்த விடயம்!

## பிணம் தின்னும் சாஸ்திரம்

தேசத்தை
எரித்து விட்டு
சிரித்துக் கொண்டே
மறுத்து விடும் -
உன்
கறுப்பு வார்த்தைகளை
யாராலும் வாசிக்க முடியாது!

இரத்தப்பனி படிந்த
நடுநிசியில்
கொலை வெறிக் கும்பலின்
சதி வலையால்
குலை நடுங்கிய குடும்பங்கள்
தலை தெறிக்க ஓடின!
நிலவு வெம்பிப் போய்
தன் முகத்தை
விலக்கிக் கொண்டது!

கடுகளவும் கேடு செய்யாத
நாம் சூடு படுவதன்
சூத்திரம் தான் என்ன
எம்
ஆதிக்குடி மண்ணிலேயே
அடிபட்டு வெடிபட்டு
விரட்டப்படுவது எதனால்
அப்பாவி ஆன்மாக்களுக்கு
ஏன் இந்த
அக்கிரம அவஸ்தை



குருதிப் பிரளயத்தில்
அமிழ்ந்து தத்தளித்த
கைக்குழந்தைகளைக் கூட
சுட்டு பொசுக்கிய
ஈனச் செயலர் தான்
தியாகிகளாய்
நாளை
'வீரச்சாவு' அடைவர்

வரலாற்றின் நெடுகிலும்
ஆதரவற்ற அநாதையாய்
அடையாளமற்ற அகதியாய்
இருக்கப் போவதில்லை
எமக்குள்ளிருக்கும்
தீப்பிழம்பு கக்கி
விரைவாய்
சாம்பலாகிப் போவாய்!

ஆயுதக் கொடுமையும்
மறுக்கின்ற
குடியிருப்பு உரிமையும்
கசப்பான
சிறு சிறு தவறுகளென்று
பசப்பு வார்த்தைகள்
மீண்டும் மீண்டும்
நீ கூறி வைப்பாய்!

உன்
சித்தம் கெட்டுப்போய்
சீழ் வடிந்து
நாற்றமெடுப்பது
முழு உலகிற்கும் தெரியும்!

## எஞ்சியுள்ள எச்சங்கள்

என் வாழ்வு
என்னைத் தாண்டிச் செல்வதை
காலக் கண்ணாடியில்
பார்க்கிறேன் - அதில்
உறைந்து போன
அவள் உருவம்
மனக் கண்ணில் இன்னும்
தெளிவாய்த்தான்
தெரிகிறது!
இன்னுமொரு
சந்தர்ப்பம் கிடைத்தாலும்
அதுவும்
நாசமாய்ப் போகும்-
இங்கு
வாழ்ந்து கிழித்து!

இதயச் சாரளத்தினூடே
இந்த ஜென்மத்தின்
குற்றமெல்லாம் வெளியேறி
அவள்-என்
உட்சுவாசமாயிருப்பாள்!

தினமும்
தோலுக்கடியில்
உஸ்ணமாய்-
ஊர்ந்து செல்லும்
என்
உணர்வுகளில்





முன்பு ஒருபோதும்
அறிந்திராத
அவஸ்தையை
அடைந்தேன்!
ஒரு துறவி போல்!

சிறுகச் சிறுக
சீரழிந்து
எனக்குள்ளேயே
சிதைந்து போனேன்
அவளுக்கான தேடலில்!

நினைவில் சுழலுகின்ற
முடிவில்லாத வட்டம்-
என்னில் தொடங்கி
அவளில் முடியும்
இறை நாட்டம்!

எனக்குள் எஞ்சியுள்ள
எச்சங்களை
முற்றாக எடுத்துச் செல்-
கீழே விழுந்து
சுவாசமற்று
செத்துப் போவதற்குள்!

இது
எனக்கு
வாழுமிடமில்லை
சாவதற்கு
வந்த -இடம் என்று
அவளுக்கு
சொல்லி வையுங்கள்!

# வித்துடல்கள்

ஆயுதம் உனக்கு
ஊன்றுகோலாக உள்ளவரை
என்னை
ஊனமாக்கிக் கொண்டிரு!

தலையில்
அடிக்கடி குட்டு
நான் குனிந்து கொள்கிறேன்!
வாயை இறுகப் பூட்டு
நான் மூடிக் கொள்கிறேன்!
காதுகளை ஒட்டு
நான் அடைத்துக் கொள்கிறேன்!

இரவோடு இரவாக
முளையிடும் உயிர்களை
பிடுங்கிச் சவக்குழியில் நட்டு
வீர தீரச் செயல் காட்டு!
மயான விடியலில்
எம் அழுகுரல்கள்
உனக்குப் பாட்டு
ஆதலினால்
பிணங்களை வைத்துத் தாலாட்டு!
மேலும்
இச்சமூக பிரேதத்தை
நீ தீயிலிட்டு ஆட்டு!
சத்திய சகோதரா!





நாதியற்று வாழ்கிறோம்
அகதியாய்
தினம் கஷ்டப்பட்டு!

எம்மில்
இரக்கம்காட்டி
மேற்குலக பொம்மையிடம்
யாரும்
கையேந்திட வேண்டாம்
நீதி
நிதி கேட்டு!

இதுவரை
ஓட ஓட துரத்திச் சென்று
நீ சுட்டவர்களெல்லாம்
உன் பார்வையில்
செத்துப் போனவர்கள்

ஆனால்

எமது விடுதலைக்காக
இந்த புதைக்கப்பட்ட
வித்து உடல்களிலிருந்து
நாளை
கிழக்கு வெளுக்கும்
சிகப்பும்
துவக்கும் அற்ற
சுதந்திர பூமி பிறக்கும்!

ஆயுதம் உனக்கு
ஊன்றுகோலாக உள்ளவரை
என்னை
ஊனமாக்கிக் கொண்டிரு!
வலது குறைந்தவனாய்
இருப்பினும் என்னிடம்
வசதிகள் நிறையவே உள்ளன
நானும் இனி
ஆயுதம் வாங்குவதற்கு!





# தலைவரின் தவிப்பு

எம்
கண்களைத் திறந்த
தலைவனின்
கர்ப்பமடைந்த கனவுகளும்
அவரின் அரசியல்
பிரசவித்த
நிறைமாத நினைவுகளும்
உரிமைகளை வெல்லும்
விடுதலையின் விலாசம்
சொல்லும்!

தலைநிமிரச் செய்த
தலைவர்
என் கனவில் வந்து
தட்டி எழுப்பி
ஸலாம் கூறி
“துக்கமும் துயரமும்
சுவாசமாகவுள்ள போது
தூங்கிக் கொண்டிருக்க
நேரமில்லை
குருதிப் பாதங்களால்
எழுந்து நடவுங்கள்
தூக்கிச் செல்ல
நான் உண்டு!
அடிபட்டு அடிபட்டு
அடிமைகளாகும் கொடுமையை
இனிமேலும் சகிக்க
முடியாமல் வந்தேன்!"
என்று சஞ்சலப்பட்டார்!

'என் கொள்கை வளர்க்க
வாக்கு சேர்த்தவர்களெல்லாம்
இன்று ஆளுக்கொரு
சாக்குப் போக்குடன்
திக்கு திசை தெரியாது
வசை இசைக்கிறார்கள்
செருக்கு நாக்குகள்
மறந்து போய் -
மறுத்துப் பேசட்டும்!

"என் பெயரைச் சொல்லி
இச் சமூகத்திற்கு
கொள்ளி வைக்கும்
ஆட்கொல்லிப் போலிகளால்
ஆன பலன் ஒன்றும் இல்லை
அவர்களின்
வீங்கிய வங்கிக்
கணக்குகளைத் தவிர!

கொடும்பாவிகளின்
வெகுமதிகளாய்
ஊர் ஊராய்
எரிந்து
சாம்பல் மேடுகள் உயரும்

ஆயுதத்தின்
இரத்தம் கசிந்து
அப்பாவிகள் செத்து
சமாதிகள் பெருகும் பொழுதுகள்





ஆனால்
அவரவர் தற்புகழ்ச்சிக்காக
வருடா வருடம்
என்னை நினைவு கூர்ந்திட
கூடிக்கலையும்
எழுச்சியற்ற கூட்டங்களால்
எதுவும் பெற்றிட முடியாது
இப்படியே தொடரவும் கூடாது!
சிங்கத் தலைவர் மேலும்...
'என் போராட்டத்திற்கு
இனி ஏணி யார்?
ஆணி வேரற்ற
புல் பூண்டுத் தலைவர்களை
நம்பிடாது
உதறித் தள்ளுங்கள்
தொன்மைத் தொண்டர்களே!
தயவுடன் ஒன்று சேருங்கள்
அலைந்து திரியும்
எம் மக்களை
ஆபத்திலிருந்து காப்பதற்கு!
அனைவரும்
அணி திரளாது போனால்
ஆண்டவனும் நம்மை
ஆதரிக்கான்
இது தான் உண்மை!

'போராளிகளே...
என் ஆத்மா சாந்தியடைய
இது ஒன்றை மட்டும்
செய்யுங்கள்

இடர் குடியுள்ள வடக்கையும்
இழப்புகளால்
அழும் கிழக்கையும்
பிரித்தெடுக்கப் போராடுங்கள்!

ஒட்டிப் பிறக்காத
இரட்டையர்களை - அவர்கள்
முண்டத்தால் ஒட்டிட
நினைக்கும் நம்பிக்கை -
அரசன் கைதியாகும் வேடிக்கை!
என்று உறுதியாக கூறி
தள்ளாடும் உணர்வுகளுக்கும்
தத்தளிக்கும் எண்ணங்களுக்கும்
புதிதாய்
இரத்தப்பரிமாற்றம் செய்து
வானவர்களுடன் சென்றார்!
மெய்யான தலைவர்
என் கனவில் வந்து
விருட்சமாய் நின்றார்!





# அனுதாபச் செய்தி

சிங்கத்தின்
தாயக வரலாற்றில்
சேற்றைப் பூசி
அகிலமெல்லாம்
உன் அசிங்கம்!

வெளியேற்றம் என்று கூறி
வியக்க வைக்க
வேண்டாம்-
உன் வெறியாட்டம்
அடங்காத வரை!

காஸாவின் கால்களில்
கண நாளாய் படிந்துள்ள
இரத்தக் கறையை
கழுவிவிடும்
ஈரமனசு
உன்னிடம் இன்று!

விரைவாக
மேற்குக் கரையின்
தரையயை விட்டெழுந்து
கண் காணாத
தூரத்திற்குச் செல்!
உளப் பாறைகள்
பிளந்து இடம்தரும்!

நீ
விட்டுச் செல்லும்
எமது பிறந்த ஊரைப்
பார்ப்பதற்கு
வாரிசுகள்
யாருமில்லாதவாறு
வீதிகளில்
பாதி உயிருடன்
தீயிலிட்டுக் கொழுத்திய
வல்லரசுக் கரங்கள்
இன்னும் சுவாலையுடன்!

தஞ்சமென வந்து
எம்மை
துரத்தியடித்தபோது இல்லாத
வெளிச்ச விளம்பரம்- எமது
மண்ணை விட்டு
பண்பாகப் போ
எனும் போதுமட்டுமேன்
இத்தனை விவாதமும்
தாமதிக்கும் சாபமும்!





## எப்போது வருவாய்?

ஆயுள் ரேகையொன்று
அதிசயமாய்
அழிந்து போனது!

எமக்குள்
உறங்கிக் கொண்டிருந்த
உன் உயிருக்கு
உலை வைத்தது யார்?
தன்னை மறந்து
மலையும்
தலை குனிந்து நிற்கிறது
நிலையான சிலையாக
உன்
நினைவுகள் இன்னும்!

உன்னைத் தேடித் திரிந்த
விடியலின்
நாடித் துடிப்பு
நின்று போனது!
எமது மனது
மாரடைப்பால்
மரணித்தது!

நேற்று
உன் சேதி கேட்டு
காற்று கலவரப்பட்டு
கதி கலங்கியது!
சந்தியிலுள்ள

வாகை மரம் கூட
வாய்விட்டு அழுது
கண்ணீர் வடித்தது!

எவரிடமும்
எதுவும் கூறாமல் போனதால்
ஊரின் கூரியவாய்
உன்னை
பிரேத பரிசோதனை
செய்து முடித்தது -
நீயொரு
புனிதமானவன் என்று!

நீ இல்லாத
ஊரில்
பனித்துளி கூட
பாரமாய்த்தான் தெரிகிறது!

சம்பளத்தை
மட்டுமே நம்பி
ஒரு சதத்தையேனும்
சுரண்டாத உன்
தூய கரங்களைத்
தேடி அலைகிறோம்!

நீ தலைப்பிட்ட
தொடர் கதையை
இனி எப்படி முடிப்பது?

சகோதரா,
மீண்டும் எப்போது





வருவாய்-உன்
சின்னஞ்சிறு மழலைகளைக்
காண்பதற்கு?

பலருக்கும்
பா வடித்த
உன் பேனா மை
காயுமுன்னே -இன்று
உனக்காகவும்
கவி எழுத வைத்தது ஏன்?

மறை ஓதி
கொஞ்சமும் குறைவில்லாது
இறை நீதி வழி நடந்த
உனக்கு
நிறைவான சுவர்க்கம்
கிடைத்திடக் கறைபடியாத
எம் பிரார்த்தனைகள்
சமர்ப்பணம்!

ஆயுள் ரேகையொன்று
அதிசயமாய் -அநாவசியமாய்
அழிந்து போனது!

## கலையாத கருவும் மரிக்காத சிசுவும்

வழியனுப்பும் வேளையில்
வயிறு புடைத்துக்கிடக்கும்
கனாவொன்று படுத்தும்-
இனம்புரியாத அவஸ்தை
பொல்லாதது!

நடுநிசியின் சிம்மாசனத்தில்
கண்டபடி வாய் முளைத்துப் பேசிய
கனாக்களால்
தொடர வேண்டிய தொடர்புகள்
தொலைந்தும்
நிலைக்க வேண்டிய உறவுகள்
நினைக்கப்படாமலும்
எல்லைகளற்ற இச்சையாய்
முடிந்து போயின!

புணரா மனக்கருக்களால்
உறவு சிசுக்கள்
எப்படி வருமென்று
அவளைக் கண்டால்
கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள்!

மரிக்காத சிசு ஒன்றின்
அரை தசாப்த
பிரசவ நகர்வின்
குறுக்கே
அபசகுணப் பூனையாய்
அந்த அக்னி நாட்கள்!





மறதி
மறப்பதை மறந்து போனால்
மணவறையில்
இறவாமலிருக்கும்
இவள்
இப்போது ஒரு
முகவரியற்ற ஆத்மா
இந்த
நோயாளியான மனதில்தானா
உங்களுக்கும் வாடகை வீடு தேவை?
அவளிருக்கும் தேசத்திற்கு
யாரும் செல்ல வேண்டாம்
ஏனெனில்
நாமாவது இனி
நாமாகவே இருப்போம்!

தோழா,
நட்புக்கள் எப்படி
இடறி விழுந்தாலும்-
எப்போதும் பிரிவு
என்பது-
அவளுக்கு மட்டுமேன்
விளங்கவில்லை!

மனதைப் பற்றி-
எல்லாமே அறிய முயன்று
முடியாது முடிந்து போனவர்களில்
அவளும்
ஒருத்தி என இலக்கமிடப்பட்ட பின்
வழிவிட்டு வாழ்த்த
இழந்து போன அவளிடம்

பகல் நிலா வாழ்த்துக்களைத்தான்
எதிர்பார்க்க முடியும்!

வெளியில்
உன்னைப் பலர்
தேடிக் கொண்டிருப்பது
தெரிந்துமா?
அவள் நினைவுகளின் மடியில்!
உதறித்தள்ளி- எழுந்து வா!
மாதவிபோல்
களங்கப்பட்டுப் போன
அவளது நட்பு
அவளுக்கே தெரியாமல் போனது-
கோடியான வேடிக்கைதான்!

நினைவின் ஓரங்களில்
இதயத்தின் நாரிழைகளில்
கனவுகளின் கடைசிப் பகுதிகளில்
யாராவது பெண் ரூபத்தில் குந்தியிருந்தால்
விரட்டி விடவும்!

வழியனுப்பும் வேளையில்
உன்னை-நீ
திருப்திப்பட்டுக்கொள்
உன் தாயின் கருவறையும்
அவள்-
இதயவறையும்
வித்தியாசமானவை என்று!





## முதுமை

இளமையின்
திரை நீக்கி
உரையாற்றும்
நரை முடிகள்!

கனவுகளுக்கு
இரையான நாட்களில்
வரையப்பட்ட
தலையெழுத்தின்
கடைசி எழுத்து!

கருப்பையுள் புதைந்திருந்த
முளையங்கள்
கை தடவும்
தூரத்திலில்லை இன்று!
கடல் கடந்தும்
வானுயரப் பறந்தும்
போயின!

குஞ்சுகளற்ற கூடு
என்
மாளிகை வீடு
வயதுக்கு
வயதானால்
அது படும்பாடு
சரிவராத சமன்பாடு
இதுவே

யௌவன கணக்கின்
வாய்ப்பாடு!

வாழ்க்கைப்
புத்தகத்தில்
அநுபந்தமாய்
கூன் விழுந்த
அனுபவங்கள்:
கடைசிவரை
தடி ஊன்றி
மனம் தளராது நிற்கும்!





## ஊமையின் உயில்

உனது மனப் படிகளில்
தவழ்ந்து வரும்
என் விருப்ப சிசுக்களை
இறுக்கி அணைத்துக் கொள்

என் உளக் கலாசாலையில்
உனக்கு மட்டுமே
சாகாத காவியமாய்
காதல் விரிவுரை நடாத்துவது
யாருக்கும் தெரியாது!

உன் மூளையே மூலையில்
வீசி எறிந்திருக்கும்
என் இதயத்தை
பத்திரப்படுத்து-இனி

அது உன்னில் சுருங்கி
என்னில் விரியட்டும்
உயிரே நீ
சுவாசித்து
என்னை வாழ விடு!

இனம்புரியாத
தவிப்புடன் சலிப்புக்களில்
ராத்திரிகள்
உஷ்ணத்துடன்வீணாகிப்
பல வருடங்கள்

என்னை வரவேற்று
பாவம் -பாவம்அறியாது
நாசமாகியது இளவயது!
பிரேத பரிசோதனையில்
உன்னால் இயங்காது
உக்கிப்போன
என் இதயத்தின்
இழைய நார்களில் கூட
நீயேதான்
தொங்கிக் கொண்டிருப்பாய்
உயிர் நீங்காத
நீண்ட புழுவைப் போல்!





## நிராயுதபாணி

உன்
முடிவுகளின்
முடிவிலியாய்
என் விடிவு!

செத்துப் போன
சித்தமும்
அசுத்தமான
பித்தமே கரைந்த
இரத்தமும்
உன்
மரபியல் வடுக்கள்!
சூரியன் இனி
கிழக்கில் உதிக்காது!
அது
வடக்கில் எழுந்து
கிழக்கே மறையும் !
பிறகென்ன
யானை கட்டும்
சங்கிலியில் இட்டு - எம்
அங்கங்களை
அவ்வப்போது அறுத்து
தானம் செய்து கொள்!
ருசி பார்த்து புசிக்க
உனக்கு நல்ல ராசி!

இருகையேந்தும்
ஆண்டவனின் ஆயுதத்தை
எங்கோ
தொலைத்து விட்டு
புலம்பிக் கொண்டு
பரதேசிபோல் திரிகிறோம்
யாரைக்
குற்றம் சொல்ல?





## வாய்பேசும் முலையூட்டி

சாம்பல் மேட்டின்
சிம்மாசன யாத்திரைக்கு
சுவாச அசைவுகளில்
ஜீவ மாத்திரை விழுங்கி
குடும்பம் நடாத்தும்
காற்று வழிகளின்
பரிணாம முகத்தில்
பேய் அறைந்த பரிதாபம்!

காலம் மாறிப் போய்
ஒரு சாதியாக கிடந்தும்
இச் சண்டியன்
இளமை மட்டுமேன்
இன்றையின் நாளையை
மறந்து நடைப்பிணமாய்?
எவர் செய்த சூனியம்-
என்ன பிசாசு ஆட்டுதோ!
எல்லாம் அவன் ஒருவனுக்கே
முழு வெளிச்சம்!

தாடி வளர்த்து
சோகமாய் கிடக்கும்
இவ்வளாக முகவரி!
காய்ச்சல்காரனின்
வாய் போல் காய்ந்து
என்னமாய் உரிந்திருக்கிறது!
அதில்தானே
முதலீட்டாளர்களுக்கான
பெறுமதியற்ற

மூலப் பொருளுண்டு!
நேற்று ராவு
பல்லி கூட சொல்லியது
ஒரு ஜீவனின்
வயிற்றில் அடித்து
மற்றையது வாழுமென்று!
நாலு காசு சேர்க்க
மலை பிளக்கத் தேவையில்லை
கொடுக்கல் வாங்கல்
வணிகமிருக்கும் வரை!

அதன் ரசனைகளே
பலருக்கு நித்திரைக் குளிசை
ஆனால்
தூங்காமலே கனவு காணும்
தரித்திரியம் பிடித்த
கொச்சையான இச்சைகளின்
ஜனனங்களில்
இடி விழுவது நிச்சயம்!

நமக்கு-
கொஞ்சம் காற்று
குடிக்க நீர், தீஞ்ச சோறு
சாய்வதற்குத் தரை
நம் தாயின் இதய இயக்கி
இவை போதும்-
வாய் பேசாத மிருக ஜாதி போல்
மிக எளிமையாக
வாழ்வதற்கு!





வீண் மனக் கிடக்கையின்
உதட்டு மடிப்புக்களில்-
செங்கோலால் சுடு!
குறுக்கே வரும் காற்றின்
நாக்கை வெட்டிப் பிள!
ஏன்
இந்த புல்லரிக்கும்
புவி உருண்டைக்கு
நஞ்சு கொடுத்து சாகடி!

இல்லையென்றால்-
ஊருக்குள் உலாவும்
பிள்ளை பிடிக்கும் பூச்சாண்டி
உன்னையும் தின்று
கடலில் கை கழுவும்!

# நீ தேடும் நான்

நான்
மனிதனை மறந்து
பல ஆண்டுகள்
பறந்து போயின!
இன்னும்
காடுகளின் மடியிலும்
அதன் இடுக்குகளிலும்தான்
உறங்கிக் கொண்டிருக்கிறேன்!

ராத்திரியில் மட்டுமே
வெளவாலாய் உலாவரும்
கொன்று குவித்த
எனது பயங்கரம்
என்றாவது
வெற்றி பெறுமா?

உறவுகள் அற்ற துறவறமும்
நஞ்சுக் குப்பிக்குள் இருக்கும்
விடுதலை மந்திரமும்
எனது
நிற மூர்த்தத்தின் மறுபக்கங்கள்!

என்னையும் ஒரு நாள்
குண்டுகள் துளைத்து
அநாதைச் சடலமாய்
சாக்கடையில் கிடப்பேன்
என் புகைப்படத்தையும்
ஒரு கற் தூணையும்





உங்களுக்காக
விட்டு விட்டு!
கலியுகத்தின்
சல்லடையாக
வாலிபங்கள்
சிறுகச் சிறுக
நாசமாய்ப் போகும்!
வன்முறையால்
மற்றவரைத்
துன்புறுத்தியே
சபிக்கப்பட்டவனானேன்!

எனக்கென்று ஓர் இனம்
இப்போது இல்லை
நான்
மறைக்கப்பட்டுள்ள
“இனம்தெரியாத’
நபர்களில் ஒருவன்

# எனது அமைச்சு

நேற்றைய
நானல்ல...
நான் இன்று!

வீதிக்கு வீதி மோதிய
என்
விடுதலைக் கோஷங்கள்
அடித் தொண்டை அதட்டல்கள்
ஆட்சியை
கூறு போடும் கூக்குரல்கள்
ஆக்ரோசமான போராட்டங்கள்
நித்திரை தொலைத்த
பாத யாத்திரைகள்!

என்
வெளி நடப்புக்களும்
உன்
கடையடைப்புக்களும்
வெறும் உருவமாய்
பிறவி மலடி போல்!
காரியம் சாதிக்க
ஆதிக்க வெறி
முறிப்பேன் என்று
முழங்கி விட்டு
உதடுகள் மட்டும் உசும்பின
மௌன பாஷையில்
விவாதம் செய்வதாய்!

அதிகார வாய்ப்பூட்டு
கை நிறைய நோட்டு
என் சீட்டிற்கு





இனி இல்லை வேட்டு
ஆகவே-நானே
என் கழுத்தை வெட்டி
உன்னை மறந்து போனேன்!
இப்போதைக்கு
வேண்டாம்
பொறுத்திருந்து பார்ப்போம்
கொஞ்சம் கொஞ்சமாய்
என்னை
உன் மனதில்
எழுப்பி வைக்கும் வரை
தயவு செய்து
தேர்தல்கள் வேண்டாம்!

எனக்குத்தான்
எல்லாமே தெரியுமே
எதை எப்போது
செய்வதென்று
யாரும் எதுவும்
சொல்லித் தரத் தேவையில்லை!

எனது வேகம்
எனது வியூகம்
எனது பேச்சு
எனது அமைச்சு
எனது 'நான்'
உள்ளவரை
இனிமேல்
இப்படித்தான் நான்
முடிந்தால்
நீ
உன்னைச் சற்று
மாற்றிக் கொள்!

## காணிக்கை

பலஸ்தீன்
பாலகர்களின்
குருதியால் வரையப்பட்ட - உன்
ஆக்கிரமிப்பு எல்லை
மீட்கப்படும் காலம்
வெகு தொலைவிலில்லை!

ஈராக்கில் - உன்
ஈவிரக்கமற்ற
நிர்வாணச் சித்திரவதை
கதை கேட்டு
இந்த மனதேசத்து
வீதியெங்கும் கறுப்புக்கொடிகள்!

தூய்மையான - எம்
பெண்களை தொட்டிழுக்கும்
உன் அட்டூழியம்
நாசமாய் போகும்
நாள் வந்து விட்டது!

கர்பலாவின்
கதறல்கள் கேட்டுமா
இன்னும் அடங்கவில்லை
உன்
வல்லரசுக் கர்வம்!

சிசுக்களைக் கூட
சுட்டுப் பொசுக்கும் - உன்
இனச் சுத்திகரிப்பு கண்டு





அடங்கிப் போகாது - எம்
இரத்த தியாகம்
அவை காஸா நகரில்
உனக்கெதிராய்
கால்கள் முளைத்து நடக்கும்!

கண்களைக் கட்டி
முதுகிலே குத்தும் - உன்
சேலை கட்டிய ஆண்மை
தெரிந்து கொள்ளட்டும்
வீர மரணத்தை புசிக்கவே
ஜனனித்த ஆன்மாக்கள்
நாங்கள் என்று!
எம்
உயிர்களை
கொள்ளையடித்துக்
கொண்டிருக்கும்
உன் வெள்ளை மாளிகைக்கு
இனிமேல்
பெயரிட்டுக் கொள்
'முஸ்லிம் மையவாடி' என்று!

இந்த தூரத்து
உள்ளக் குமுறல்கள்
தினமும்
மடிந்து கொண்டிருக்கும்
தியாகிகளின்
இதய இயக்கிகளுக்கு
காணிக்கையாகட்டும்!

# ஆத்மாவின் புண்!

உன் பாதையிலே
போராட முன்
இந்த இறுகிப் போன
கரடு முரடான மனதோடு
சண்டையிட்டு
மாவீரனாய் வருகிறேன்
உற்றோரும் சுற்றாரும்
மற்றோரும்
கதை கூறி
திசைதிருப்ப முன்
நீ என்னை
அணைத்துக்கொள்!

வலிமையான
உறவுச் சங்கிலியால்
விலங்கிட்டு
பெரும் பாசவலையால்
பிடித்து வைத்து
மெல்லப் பிரிந்து
மேலே போகத்துடிக்கும்
உயிரை தடுக்காது
சும்மா விட்டு விடுங்கள்!
பட்டம் பதவி
இளவயது என்று கூறி
இளப்பாறிச் செல்ல
இயலாது இன்று!

பிறக்கு முன்னே
கருப்பையுள் சிதைந்தும்





பிறந்தவுடனேயே
மூச்சை
நிறுத்திக் கொள்ளும்
சிசுக்களும்
புள்ளி விபரமாய் மட்டும்
வாழும்போது
நான் மட்டுமேன்

சுயநலமாய்
வாழ வேண்டுவது?

மரணிக்கவே
ஜனனித்த ஜீவன்
நான்
போகிறேன் என்று
கூறும்போது
யாரும்
அடைத்து வைக்க
வேண்டாம்!

அதன் பாட்டில்
அது போகட்டும்!

உலகே நீ
கை வைத்து
காயப்படுத்த வேண்டாம்!
ஆண்டாண்டு காலமாய்
வாழ்ந்தாலும்
அரை நொடிதான்

நாடி துடித்தாலும்
தேடலின் இடப் பெயர்ச்சி
பூச்சியமாதலால்

சுவர்க்கத்தின்
ஒரு ஒதுக்குப் புறமாய்
அது
சிறு கொட்டிலமைத்து
வாழ்ந்துகொள்ளட்டும்!

பல நூறு பேரழிவுகள்
வந்தாலும்
எனக்கென்னவென
வாழும்
நஞ்சாய்ப்போன
வஞ்சக நெஞ்சங்கள்
சஞ்சரிக்கும்
இவ்வையகத்தில்
கொஞ்சமும்
தாமதிக்கப் போவதில்லை
இந்த ஆத்மா!

இதனை
பத்தரப்படுத்தி
அனுப்புங்கள்-அதன்
காயத்தின் ஈரம்
காயுமுன்னே!





## கைவரிசை

வறட்டுக் கௌரவம்
காக்கும் பெண்மை!
பாவாடை நாடாவில்
தொங்கும் ஒட்டுண்ணி
ஆண்மை!
இது பல்லாண்டாய்
பட்டினி கிடக்கும்
கட்டிலறை உண்மை!
ஆம்-
வாரிசுகளுக்கு
வழங்கப்படும்
ரொக்கப் பரிசு
சீர்வரிசை எனும்
ஆசீர்வதிக்கப்படாத
கைவரிசை!

## போலிச்சித்திரம்

உத்தம நபியின்
உருவம் வைத்து
ஐரோப்பிய அரக்கர்கள்
கிறுக்கிய கேலிச் சித்திரத்தால்
உள்ளமெங்கும்
வல்லரசுக் கோடாரி
கொத்திய ரணங்கள்!

இரத்த நாளங்கள் புடைத்து
கண்களால் உதிரம் வடிகிறது
அவன்
அரியாசனத்தை இடிப்பதற்கு
இதயம்
வேகமாய் துடிக்கிறது!
ஒவ்வொரு
மூச்சும் தீப்பிழம்பாகி
அவன் ஈனச் செயலை
சுட்டுப் பொசுக்கும்!

நெடுநாளாய்
திட்டங்கள் போட்டு
கட்டம் கட்டமாய்
அவன்
அட்டகாசங்களை
சட்டங்கள் காட்டி
கலிமாவின் ஆத்மாக்களை
வெட்டிப் புண்படுத்துவான்!





பிறவி ஊமைகளாய்
கண்திறந்த கபோதிகளாய்
மத்திய கிழக்கு தலைமைகள்
அவன்-
கால்களுக்கடியில் கிடந்து
தியாகிகளைக் காட்டிக் கொடுத்து
நல்ல பிள்ளைகளாய்
காலம் கடத்தும்!
அன்று
முஸ்லிம் தேச
மலசல கூடக் கழிவுகளிலும்
உயிரியல் ஆயுதம் தேடினாய்
உள்ளாடைகளுக்குள்
அணு உலை இரகசியங்கள்
இருப்பதாய் கூறினாய்
இன்று-
ஏன் எமது நம்பிக்கையில்
உன் கையை வைத்தாய்?
எழுத்துச் சுதந்திரம்
எனும் போலி வேலி போட்டு
கேலி செய்யும்
மேற்குலகை பலியெடுத்து
திருமறை கூறும் துரோகிகளை
தோலுரிக்க வேண்டும்!

இப்பூலோகக் கிராமத்தின்
சகோதரா!
சத்தியம் செய்து
புறப்படுவோம்

சுவர்க்கத்தின்
படித்தரத்தை
உயர்த்திடுவதற்கு!
ஐவேளை தொழுது
மக்கா சென்று
மார்பு தட்டி
தன்பாட்டில்
வாழ்ந்து விட்டால்
கலிமாவைக் காப்பாற்றுவது
யாரடா நண்பா?
கணப்பொழுதேனும்
காத்திருக்க நேரமில்லை
தியாகத்தின் பாதை
திறந்துள்ளது
பறந்து வா
விரைந்து செல்வோம்!





## என் முந்தாணை முடிச்சு

இனிமேல் நானும்
ஒரு தலைவன்
ஒரு தொகை தொண்டர்கள் வேண்டும்
எனக்கும்
தொண்டுகள் செய்வதற்கு!

தலை நகரில்
பெயர்ப்பலகை
மாட்டி வைக்க பகட்டாய்
காரியாலயமொன்று தேவை!

என் இருப்பை
உறுதிப்படுத்த
அவ்வப்போது
உதிரிகளாய்
நாலு வார்த்தைகள்
அறிக்கையாய் வெளிவரும்!

மாணவருக்கு
செருப்பு சோடி
அன்பளிப்புச் செய்து
வர்ணப்படம்
அடிக்குறிப்புடன்
பிரசுரிக்க வேண்டும்!
என் வாக்குறுதிகளே
இனி வானத்தையே
தாங்கி நிற்கும்
பெரும் தூண்கள்!

பட்டுப் போன்ற
பஞ்சு மேனி
மேகக் கூட்டம்
கல்லாய் இறுகிப் போகும்
என்
மனதைப் போல்!
கல் மழைதான்
இனிச் சொரியும்

எனக்கென்ன
அம்மையாரின்
முந்தானை முடிச்சில்
முழு மூச்சையும்
அடகு வைத்து
நான் நிம்மதியாய்
உறங்குவேன்
ஏனெனில்
நான்
இன்னுமொருசொல் பிழைக்காத
தலைவன்!





## உலகப் போர்

மூன்றாவது
தடவையாக
உலக மகா
யுத்தம் விரைவில்
கோலாகலமாய்
நடக்கும்!

அதுபல
ஒடுங்கிய
நாடுகளின்
ஜனங்களையும்
ஜனனங்களையும்
கடிக்கும்!
தேய்ந்து போன
இவ்வுலக
சாம்ராஜ்யத்தின்
கதாநாயகர்கள்
அணுகும் முறையில்
அணுகி அணுகுண்டு
தயாரிக்கிறார்கள்!

இதுவரை
கண்டு பிடிக்கப்பட்டுள்ள
பற்பல
பீரங்கிகளும்
துப்பாக்கிகளும்
புதுப்புது
புலமைகளால்
புதுப்பிக்கப்படுகின்றன!

மூன்றாவது
தடவையாக
உலகப்போர்
விரைவில்
கோலாகலமாய்
நடக்கும்!

ஒவ்வொரு நாட்டின்
நாலு திசைகளில்
இரண்டு
திசைகளாவது
அப்போருக்கு
அழைக்கப்படும்!

அவ்வழைப்பிற்கு
எமது
நாட்டின்
வடக்கும் கிழக்கும்
மரியாதை செய்யும்!

ஜாதி ஜனங்களுக்கும்
மிருகங்களுக்கும்
பறவைகளுக்கும்
அகதி முகாம்
தயாரிக்கப்பட்டுள்ளது
என பல தலைவர்கள்
அறிவிப்பார்கள்!

ஐ.நா.தலைமையகத்தில்
எமது
நாட்டிற்கென்று





விசேட முகாமொன்று
காணாமல்
போனவர்களுக்காக
அமைக்கப்படும்!

மூன்றாவது
தடவையாக
உலகமகா
யுத்தம் விரைவில்
கோலாகலமாய்
நடக்கும்!

# செருப்புச் சோடி

நீண்ட பொழுதுகளாய்
நாழிகை நகரும்
உறுதிமொழிகள்
இழுக்க முடியாத
இறுகிய இறுதி மூச்சில்!

ஒரு வருட ஆயுள் கூட
ஒப்பந்தமாய்
விகிதத்தில்- உன்
சுவாச மையம்!

இலக்கங்களும்
எண்ணிக்கைகளும்
நம்பிக்கையிழந்து
அகதி முகாம்களில்
எண்ணங்களைத் தொலைத்து
காத்திருக்கும்
அரசியல் அநாதை!

மீண்டும்
குப்புற வீழ்ந்து விட்டு
மீசைதான் இல்லையே
மண் படுவதற்கென்று
கதை கூறுபவர்களை
விட்டு விட வேண்டாம்!

பிச்சைச் சம்பளம்
ஒன்றே போதுமென்று
யாரும் கேட்கவில்லை





திறைசேரியை
சரியாகப் பிரித்து
பங்கை தந்து விடு!
வெள்ளைக் கைகளில்
செல்வம் வந்து
கதவைத் தட்டும்
வெளிநாட்டு பைகளில்
எல்லாமே
அங்கு வந்து கொட்டும்!

எமது
மௌன பாஷைகளும்
சிறுசிறு முணுமுணுப்பும்
தோற்றுப் போனதால்
எமக்கு
அன்பளிப்பாய் கிடைத்தது
அளவில்லாத
செருப்புச் சோடி மட்டும்தான்!

செருப்பை வைத்து
நெருப்பை மூட்டு
இனவாத செருக்கை
தீயிட்டுக் கொழுத்துவோம்!
யாரும் யாரையும்
எதிர் பார்க்க வேண்டாம்!
நீ - நீயாக
எழுந்து வா!

நாமாக!
நம்
மண்ணை வெல்வோம்!

# உனது நோய்

நிலவைப் போல அதன் பாட்டில்
நிம்மதியாயுள்ள என் தேசத்தை
குண்டுகள் வைத்து பல
தடவைகள் சிதறடித்து
சேதப்படுத்திக் கொண்டிரு
உன் இச்சைப்படி!

என் இனத்தின்
எல்லா உயிர்களையும்
குடித்து முடித்து விடு
கடைசிச் சொட்டு
ஜீவனின் விடுதலைக்கு
முன்னராவது!

அங்கும் இங்குமென
ஆயுதபீதியில்
நான் ஒளிந்து
எனக்கு மறுக்கப்படும்
என் குடியிருப்பும்
தொப்புள் கொடியும்!

நாளையோ நாளை
மறுதினமோ நானும்
என் குறைந்தபட்ச
சந்தோசமும் தடயங்களற்ற
பழைய சங்கதிதான்!
எப்போதும் உன்னை விடவும்
என்னையே கவனித்துக்
கொண்டிரு





மோப்பம் பிடிக்கும்
வாலுள்ள பிராணியாய்!

ஏனெனில்
எனது வீழ்ச்சியில் தான்
உனது மகிழ்ச்சியும்
நீ கூறும் - உன்
மக்கள் எழுச்சியுமுண்டு!
இனிமேல்
எனது பேனாவையும்
விட்டு வைக்காது
அதன் முதுகில்
சுட்டுத் தள்ளு!

இத்தனைக்கும் நீயொரு
அசாதாரண மன நேயாளியா
அல்லது பிணம்
தேடும் போராளியா?

## தடுப்பூசி

நிம்மதியாய்
விடுதிகளில் விழித்திருக்க விடாத
ராத்திரிகள்
நாசமாய்ப் போகட்டும்!
எங்கோவொரு
மூலையில்
சுடுகாட்டிற்கு
பிணங்களைச்
சம்பாதித்துக் கொண்டு!

'நித்திரை தேவை'
எனும் விளம்பரம்
மன வீதிகளில்
வலம் வரும் காலம்
அது
பரீட்சைக் காய்ச்சலின்
அறிகுறி - வேறில்லை!

நேற்று ராவு
என் மன உடலை
வித்தியாசமான பெரும் கனவொன்று
ஏறி மிதித்து விட்டுச்
சென்றது!
ஆய்! உம்மா!
இப்போதும் வலிக்கிறது
குருதி வரவில்லை
உட்காயம் தான்!





படிப்பு
பந்தமாய்ப் போனது
அது
பொல்லாத
வியாபாரச் சந்தை
தந்தைகளுக்கு
கௌரவப் போர்வை
ம்ம் ....ம்ம் ....
என் மனது
கிழிந்து
துண்டாய் தொங்குகிறது!

ஓடி முடிப்பதற்குள்
ஆயிரம் பேர்
அன்பளிப்புக்களுடன்
விருப்பு வெறுப்புக்களற்ற
நூறு வீதத் திணிப்பு
ஏனெனில் ....
பந்தயம் அப்படிப்பட்டது!

உனக்குள் ....
உள்ளம்
ஓட்டையாயப் போனாலும்
கனவுக்குள் கனவுகள்
மின்னலாய்!!
நண்பா,
பரிசு நிச்சயம்
நீ
குறுந்தூரத்தை

ஒரு
தசாப்தமாய் ஓடினாலும்- உன்
பரிசு நிச்சயிக்கப்பட்டது!
மருந்துகளில்லை
இது
காலங் கடந்த நோய்
இச் சமுதாய மூளைக்கு
உடனடியாய்
சத்திர சிகிச்சை தேவை!





# மணியோசை

சமர் புயல் ஓய்ந்து
அமைதியாய்
உறங்கிக் கிடந்த
மனதிற்கடியில் பூகம்பம்
பிறையொன்று
மறைந்து போனது
என் புறாவைப் போல!

மனுக்களும்
மன்றாட்டமும்
மண்ணோடு மண்ணாகி
அசேதன உரம்
'மரத்தின்' வேர்கள் மட்டும்
சந்தோசத்தில்!

பெரும் தலைகளுக்கு
தலைவலியென
ஓய்வெடுத்து
வாய் நிறைய 'வெற்றிலை'
பேச முடியாமல்
சப்பிக்கொண்டு
துப்புவதற்கு நேரமாகியும்
இடம்தேடிக் கொண்டு!

உயரத்தில் 'மணி' கட்டி
தீவு முழுவதும்
அபாயமென்று
சிவப்பு அதிர்வலைகள்!

செவிப்பறையில்
இடி மின் தாக்கம்!
சொகுசு எனும்
மெழுகு ஊத்தையால்
காது கேட்காது போனது
வெள்ளை தொப்பிகளுக்கு!
'காவி உடையின்'
சிறு நூல் கூட
இனி உன் மீது
வரலாற்றுப் பழி சொல்லும்!

'யானைக்' கண்கள்
நம்மை
ஒரு போதும்
பாதுகாக்காது!
ஆந்தை விழிகளாய்
ஆண்டவன் மொழி
ஒன்றுதான்
நமக்கு-தனி
வழி காட்டும்!





26-12-2004

ஊருக்குள் கடலும்
கடலுக்குள் ஊரும் என
பிணப் பரிமாற்றம்
நடைபெற்ற தினம்!

கவலைகளை மறந்து
நிம்மதியாய்- நாம்
உலாவித் திரிந்த
கடற்கரையோரம்
மயான பூமியாய்
மாறிப் போனது!

சுனாமி-
ஊருக்குள்
'ஆமி' வந்து
சென்றாற்போல்
உணர்ந்தோம்
அந்த அட்டகாசத்தை
எப்படிக் கூறுவது?

டாக்டர் அஸ்ரப்
அவர் மனைவி
பிள்ளைகள் இருவர்
வேலைக்காரி என
எல்லோரையும்
எங்கே கூட்டிச் சென்றாய்?
உடல்களைக் கூட
நீ திருப்பித் தரவில்லை
அப்படி என்ன
கோபம் எம்மோடு?
இனி-

நிச்சயமாய்- நீ
அடிக்கடி வருவாய்
ஏனெனில்
தங்களின்
பெயர் கூடத் தெரியாத
பிஞ்சுகளின்
இரத்தம் குடித்து
ஏப்பம் விட்டாய்!

அகிலத்தின்
கூரையில் மட்டுமல்ல
ஓட்டை
எம்மவர்
உள்ளத்திலும் தான்
நாம்
பேசுவதெல்லாம்
அமில மழை தான்
அழுகிக் கிடக்கும்
எம்
அகக் கண்!

ஒரு சொட்டு
நீர்த் துளியில்
துவங்கி
பேரலையால்
காவு கொள்ளப்பட்ட
அகால
வாழ்க்கை வட்டம்!

இது
தண்டனையா?
சோதனையா?
படிப்பினையா?
எதுவானாலும்
வேதனைதான்!





## வெற்றுடம்பு வீரர்கள்

அழிவுக்கு மேல்
அழிவு
இழிவுக்கு மேல்
இழிவு

இயற்கையின்
சீண்டுதல்
ஆழிப்பேரலை
பெரு வெள்ளம்
பட்டினிச் சாவு என
எல்லாமே வந்தன
உன்னைத் தவிர!
முழு ஊருமே
ஒரு
அகதி முகாமாகியது!

தேங்காய் தேவைப்பட்டு
தேடிச் சென்ற போது
உனது
பிரசார அலுவலகத்தை
கண்டேன்-
ஆனால்
உன்னைத்தான் காணவில்லை!
பழைய சுவரொட்டியில்
நீ
எம்மைப் பார்த்து
சிரித்துக் கொண்டிருப்பது
நாங்கள்

முழு முட்டாள்கள் என்று தான்!
தேவையுள்ள போது
நீ வரமாட்டாய்
அடுத்த
தேர்தலொன்று வரும்வரை!
மீண்டும் வந்து
பழையபடி
சொல்லாததெல்லாம்
செய்வதாய்க் கூறுவாய்
பேசாததெல்லாம்
ஏசாமல் பேசுவாய்
நீயுமொரு
ஏழை என்பாய்
எம்மைப்போல்!

நாம்
திருந்தாத வரை-
வானமே பிளந்து
சூரியன் விழுந்து
உன்னருகே
வெடித்துச் சிதறினாலும்
நீ
திருந்த மாட்டாய்!

அழிவுக்கு மேல்
அழிவு!
இழிவுக்கு மேல்
இழிவு!





## தாய்ப் பால்

தாலிக் கொடி வரவால்
தவிடுபொடியானது
தொப்புழ் கொடி உறவுகள்!

பால் கொடுத்து
வளர்த்தவள்
பாழ் வீட்டில்;
கால் வைத்து
வந்தவளோ-
மேல் மாடித் தட்டில்!

இன்று
கண்டெடுத்த
கறுத்துப் போன
இதயவறையால்
சுருங்கிப் போனது- தாயின்
தங்கமான கருவறை!

தலையில்
காரமான தாரத்தை
தூக்கிவைத்து
துள்ளித் திரியும்
பாவிகள்-
மறந்து போனார்கள்
வயிற்றில்
கட்டிச் சுமந்து
கெட்டியாய்
பெற்றெடுத்த
பெறுமதியற்ற
வயதான
அன்னையரை!

# வெறுத்துப்போன வெள்ளம்

வானத்தின் ஒழுக்கு
கிழக்கில்
ஓடும் அழுக்கு
அது
இயற்கையின்
கள்ளத் தனம்
மழையின் பிழையா?
இல்லை !

எமது
கைகள்
தேடிய வினையா?

இடைவிடா
அடை மழை
எம்மில் விடைபெறாத
தொடர் கவலை!

காலைப் பொழுது
தொலைத்த கதிரவன்
பல நாட்களாய்
திரும்பவில்லை!

வீட்டின்
படிக்கட்டுக்கள்
அணைக்கட்டுக்களாய்
சாலைகளில்
படகோட்டி !
நாம் நட்டாற்றில்





மலை உச்சியும்
கைக் கெட்டும் தூரத்தில்
நாம்
பட்டினியினால்
வாய் வயிற்றைகட்டி
உதவும்
உணர்வுமில்லை
உலர்
உணவுப் பொருளுமில்லை!
தலைக்கு மேலே
தண்ணீர்
ஆனாலும்
எம்மவர்
உள்ளமோ-
உலர்ந்து
வரண்டு
வெடித்த கற்பாறை!

பாவம்-
அவளின்
அகதி முகாமும்
அமிழ்ந்து
அழிந்து விட்டது!

அரசன்
அமைச்சர்
அதிகார அவா
அனைத்துமே
பொய்யாகியது
வல்லவனின்
இயற்கை துப்பிய
எச்சிலால்!

# அப்பாவி வானம்

வெற்றுத்தாள்
உடன் படிக்கைகளும்
கைகுலுக்கும்
படப் பிடிப்புக்களும்
என்னை
அந்த போதிமரத்தடியில்
இனி வாழவைக்கும்!

உரிமையெனும்
பிரச்சார பிரளயத்தில்
நேற்றைய
ரணமான நினைவுகள்
மறந்து .... நீயும்
தொலைந்து போவாய்!

என்
கடைவாய்ப்பல் சிரிப்பில்
மயங்கி
கைகள் அசைத்து
வீசும் என் வலைக்குள்
தலை சிக்கித் தவிப்பாய்!

சினைகளற்ற
நீர்முட்டைப் பைகள் போல்
உஷ்ண கொட்டில்களில்
உறங்கும்
இந்த சிறுசுகளின்-
கனாக்களின் கருக்கட்டல்!





வரண்டு போன நாக்கு
எனக்கு என்று
உன் உள்ளம்
ஒரு நாள்
உருகி ஒழுகும்!
இந்த
மனப் புழுக்கத்திற்கு
அந்த
அப்பாவி வானத்தை
பாவியென்று
திட்டித் தீர்த்து விட்டு
வாக்குச் சாவடிகளில்
மீண்டுமொரு முறை
அணிவகுத்து
காத்துக் கிடப்பாய்
இச் சமூகத்திற்கு
ஏதும்
நிவாரணம் கிடைக்குமென்று!

# அன்புள்ள நோன்பு

இருள் படர்ந்து
உளப்பரப்பில் ஒட்டியிருக்கும்
பாவச் சிலந்தி வலையை
உன் அருள்மிக்க
கைகளால் அகற்றி விடு!

தீமைகளால்
ஊத்தை படிந்த
ஆத்மாக்களை
குளிப்பாட்டி
பரிசுத்தமாக்கி
மன வீட்டை வெள்ளையடித்து
நல் அமல்களால்
அலங்கரித்து விடு!

நோய்களைச் சுமக்கின்ற
இரத்தத்தை வடிகட்டி
விஷ வாயுக்களை
உறிஞ்சியெடு
இவ் உம்மத்தை
மொத்தமாய்
புடம் போட்டு-
இதயப் பெட்டகத்தை
நன்மைகளால் நிரப்பி
உன்
சுவர்க்கத்து உதடுகளால்
கொஞ்சி விடு!

தூக்கத்திலும்





தூற்றுகின்ற நாக்கை
கட்டி வைத்து- இறை
துதி பாட
வைக்க வேண்டும்!
இரவு பகலென
அரைத்துக் கொண்டிருக்கும்
இரைப்பையின் கதவைச்
சாத்தி விட வேண்டும்!

தற்காலிகமாக
பள்ளிகள்
நிரம்பி வழியும்
நடுநிசியில்
நின்று வணங்கவும்
இவர்களுக்கு இயலும்!
வீதி எங்கும் மீண்டும்
யாசகப் படையணிகளாய்
பெண்மணிகள்
சாலைகளில்
அணிவகுத்துச் சென்று
செல்வந்தர்களின்
முகமூடி களைவர்
இந்த
சில்லறைத் தானத்தை
நிறுத்த
தயவுடன் ஒரு வழி சொல்!

சென்ற வருடம்
எம்முடன்
நோன்பு நோற்றவர்களில்
பலர் இன்று

சுனாமியின் சமாதிக்குள்
அமைதியாய்
உறங்குகிறார்கள்
அவர்களை
அன்பாக உபசரித்துக் கொள்!
நாளை
நாமும்
புதைக்கப்படுவோம்
உன்னை
நம்பியவர்களாக!





## விஷ ஆணி

அவன்
அசைவுகளுக்கு
அப்படியே அங்குலத்தில்
நகரும் நிழல் நீ!

விலைவாசிக்கேற்ப
பேரின மனசுகளில்
பேரம் பேசி
கனாக்களில்
கை வீசி நடக்கும்
பரிசுத்த விசுவாசி!

பாதகர்கள்
பாதங்களின் அடியில் தான்
எம் இடர் படர்ந்த
தொடர்மாடிக் குடியிருப்பு!

உறுதிமொழிகளில் மோதுண்டு
பாதியாய் துவண்டு போன
வேதனையான ஜீவனம்-
நிவாரணக் குடிசைகளில்
நிர்வாணமாய்
புதைந்து கிடக்கிறது
துருப்பிடித்த விஷ ஆணியாய்!

விறைத்துப் போன
சமுதாய நரம்புகளால்
உருவான மன்னர்களின்
மனக் கழிவுகளை

அகற்றி விட
கறை படியாத கரங்கள்
எங்காவது கிடைக்குமா?
ஏழை எங்களின்
ஏக்கங்களை பக்கங்களாக
எழுதி எழுதி
முடிந்து போகாத எம் பேனா
இன்னும்
வயதிற்கு வரவில்லையெனும்
உன் நினைப்பு !
அது பெரும் தப்பு!
எம்
எதிர்பார்ப்புக்களும்
உன்
ஆட்சி அதிகாரமும்
வெகு தூரத்தில் ....
ஏழு தட்டு
வானத்திற்கும் அப்பால் !





## தள்ளு வண்டி

இன வெறியால்
குருதியில் சுத்திகரிக்கப்பட்ட
சிறு இனமொன்று
சிறகு நொறுக்கப்பட்டு
கம்பிகளுக்குப் பின்னால்

அது
உனது
அடக்கு முறையின்
தலைப்பாகை !

பாதையோரத்தில்
மழையிலும்
வெய்யிலிலும் - எம்மை
கேட்பார்
பார்ப்பார்
யாருமிலர் !
காணிப் பத்திரங்கள்
கவனமாய்
வைத்திருந்தோம்
ஆனால் -
பெரியவர் - வந்து
அங்கு
பழைய சிலைகளை
தோண்டியெடுத்தாகக் கூறி
எமது
பூர்வீக நிலத்தை
காணவில்லை என்றார் !

கையில் இரத்தமும்
வாயில் சத்தமும் உள்ள
அவர் -
பழிவாங்கலின்
மொத்த உருவம் !

விடுதலை பெற்று
தருவதாகக் கூறிய
தள்ளு வண்டி
அரசியல் வியாபாரிகள்
இன்னும் வரவில்லை
நாளைக்கும்
இதே கதி தான் !





## போர் உழுத ஊர்

பேராயுத
ஏர் பிடித்து
உழுத போரால்
அமோகமான
அறுவடை
ஊரெங்கும்
பிணவாடை!

பல்லாயிரம்
அப்பாவிகளை
உயிருடன்
சாகடிக்க -
பல இளைஞர்களுக்கு
படையில்
தொழில் கொடுத்த
பெருந்தகை!

மருத்துவ மனைகளை
தரை மட்டமாக்கி விட்டு
குண்டு துளைத்த
சடலங்களை குவித்து -
வைத்தியர்களுக்கு
இரவு பகலென
வேலைப் பளு கொடுத்த
நியாயவாதி!

பாடசாலைகளை
இடித்துத் தள்ளி விட்டு -
தடுப்பு முகாமின்

முட்கம்பிகளுக்கும்
அகதிமுகாமின்
ஓலைக் குடிசைக்கும்
கவிதை வடிக்க
கற்றுக் கொடுத்த
மகா கவிஞன்!
விஞ்ஞான தொழில் நுட்பத்தின்
முதுகில் ஏறி
வீறு நடை போடும்
எறிகணைகள் -
இனவாத ஒடுக்கு முறையின்
இறுதகைப்பில் கேட்கும்
மரண ஓலங்கள்!

பார்க்கும் இடமெல்லாம்
எமது
மக்கள் தூங்கும்
சவச் சாலைகள் தந்து -
சமாதானத்தை
வேண்டி நிற்கும்
ஒரேயொரு
ஜனநாயகவாதி!

புது மணத்தம்பதிகளையும்
விட்டு வைக்கவில்லை
இளம் பெண்களுக்கு
பிரிவின் வலியை
உணர்த்தி -
காலமெல்லாம்
காத்திருக்க





கற்றுக் கொடுத்த அனுபவசாலி!
மக்கள் தலைவர்களை
பீரங்கிப் பேச்சாளர்களாய்
இனவாதம் கக்கி
வாதாடப் பழக்கிய
பண்பாளன்!

ஆகாயத்தில்
வான வேடிக்கை;
கடலில்
உனது கண்காணிப்பு
மீன்கள் தின்னும்
எம்மவர் உடல்கள்!
பிளந்து போன பூமி - நீ
உண்மையான பலசாலி!
நீ
உழுத
ஊரில்
மண்ணைத் தோண்டி
மாணிக்கக் கற்கள்
சேகரித்தோம் -
மண்டையோடுகள்!

ஜாதி மத பேதமின்றி
போரை
வாழ்த்துவோம்!
அதற்கும்
ஒரு - தனிப்பட்ட
வரலாறு
சரித்திர காவியம்

குற்றவியல் விசாரணை
உண்டு
ஆதலினால் ---
ஆறாத ரணங்களை
மட்டும் விட்டுச் சென்ற
போருக்கு
பொன்னாடை போர்த்தி
கௌரவிப்போம்!





## என் இருப்பு நீ

உன்
கன்னிப் பார்வையில்
உயிர் நீத்தது
என் வாலிப ம்!

நம்
முதல் முழிப்பில்
உன்
அனைத்துமே
என்னுள் புகுந்து
உள்ளம் உருகி
உணர்வுகளில் நழுவி..
என் ஆத்மாவிற்குள்
உன் உயிர்
துளித் துளியாய் ஒழுகி -
என்
நரம்பு வலையெங்கும்
நீ தழுவி
என்னுள்
குருதியாய் பாய்கின்றாய்!

இனி
என் இதயம்
உன்னில் சுருங்கி
என்னில் விரியும்
உன்
அவஸ்த்தைகள்
எனக்குப் புரியும்

முழுப் பிறையான
உன்
முகம் கண்டு
தனிமை தூர விலகி
துறவறம் போனது
என்னிலிருந்து!

குறைகள்
எல்லாம் கழுவி
நிறைகள்
எங்கும் செருகி
புடம் போடும்
புதுவித கருவி நீ!

பனித் துளியை விட
தூய்மையானது
உன் பெண்மை
நீர்த் துளிகள்!
சதையாகி
உயிர் சுமந்த- நீ
உண்மை உத்தமி!
என்
சிறு தும்மலுக்கு கூட
துடி துடித்துப் போவாள்
என்னவள்!

எத்தனை
மனச் சரிவுகள் வந்தாலும்
உறுதியாய் நின்று
உளப் புணர்நிர்மாணம்
செய்யும் நல்லவள்!





விழுவதற்கு
முன்பே
தோள் தாங்கி
எழுப்பி விட்டவள்!
என்
சிந்தனைகள்
தூங்காது
சதா
தட்டிக் கொண்டிருப்பவள்!

புயலில் கூட
அசையாத மரம்
உன்
விரிந்த கரம்!
இத்தனை நாளாய்
என்னில்
புழுதி படிய விடவில்லை
உன்
பார்வை எனும்
போர்வை!

பூகம்பத்திலும்
வெடிக்காத மலை
எந்நிலையிலும்
உன் மன நிலை!

பிரகாசமான
என்
எதிர்காலத்தையே
தினமும்
நினைத்து நினைத்து ....

உன்
நிகழ்காலத்தை- நீ
மறந்து போனது
ஏனடி சொல்லடி ?

மயான அமைதியாய்
நிம்மதி தரும்
மஞ்சகம் நீயாதலால்
உன்
நிழல் கூட
எனக்கு
நிஜம் தான்!

நிலா வேண்டாம்
பாக்களுக்கு
நீ
மட்டும் போதும்
பூவைப் போல்
சுகந்தமாய்
போற்றிப் பாட!

எனக்குள்
நாமாகிய
உன்னைக் கண்டு
வானம்
பொறாமையில்
இருண்டு கிடக்கிறது
மழையில்லாத
புழுக்கம்
மேகத்திற்கு ஏக்கம்!





வெற்றுப் பக்கங்களே
அற்ற
என்
வாழ்க்கை ஏட்டில்
உன்
ஒவ்வொரு
உறுதி மொழியும்- அதில்
வழிகாட்டும்
பெரும் நாவல்!

என்
ஒவ்வொரு
பேச்சுக்கும்
உன்
மூச்சுதான் காவல்!

இனிமேல்
வாழ்வது
உனக்காகவும்
உன்
உயிரூட்டலுக்காகவும் தான்
கணதியாய்
கனவுகளைச்
சேமித்துக் கொண்டு!

உன்
குதிரைவலு
விழிகளுக்குள்
ஆயுட் கைதியானதால்
எத்தனை
இடிதான்

விழுந்தாலும்
உன் மடிதான்
என்
மரணப்படுக்கை!

என்
பிறப்பிடமும்
இருப்பிடமும்
நீயன்றி
வேறில்லை- நம்பு
என் சொல்லை!
ஆதலினால்,
எமக்குள்
செத்துப் போவது
காதல் அல்ல
காலம் மட்டும்தான்
என் காதலி
அவள் -
என்
அன்பு மனைவி!

கிழக்கிலங்கை, கல்முனை மாநகரைப் பிறப்பிட மாகக் கொண்ட அஸாத், இலங்கைப் பல்கலைக் கழக மருத்துவ (MBBS) பட்டதாரியாவார்.



தனது பன்னிரண்டாவது வயதில் தினகரன் பத்திரிகையில் வெளியான கட்டுரை மூலம் இலக்கிய உலகில் பிரவேசித்தார். கவிதை எழுதுவதில் அதிக ஈடுபாடு கொண்டுள்ள இவர், முன்னோடி தேசிய பத்திரிகைகளில் பல நூறு கவிதைகளை எழுதியுள்ளார். கவியரங்குகள், வானொலி, தொலைக்காட்சி நிகழ்ச்சிகளிலும் பங்குபற்றி யுள்ளார்.

பாடசாலையின் இலக்கியமன்ற செயலாளராகவும் 'மஞ்சரி' சஞ்சிகையின் இணை ஆசிரியராகவும் செயற்பட்டுள்ளதுடன் பல்கலைக்கழக முஸ்லிம் மஜ்லிஸின் செயலாளராகவும் அதன் இதழான 'அல் ஷிபா' சஞ்சிகையின் ஆசிரியராகவும் பணியாற்றியுள்ளார்.

இலங்கை வைத்திய நிருவாக சேவையில் பணியாற்றிய அஸாத், தற்போது பாணந்துறை கேதுமதி அரசினர் மகப்பேற்று வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகராக கடமையாற்றி வருகின்றார். கொழும்பு பல்கலைக்கழகத்தில் வைத்திய நிருவாகத்துறையில் கல்முனை பிரதேசத்திலிருந்து விஞ்ஞான முதுமாணிப் பட்டம் பெற்றுக்கொண்ட முதலாவது வைத்தியர் என்பது குறிப்பிடத்தக்கது.

சிறந்த முகாமைத்துவமும் ஆளுமையுமிக்க இவர், மன்னார் பொது வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகராகவும், கொழும்பு தெற்கு போதனா வைத்தியசாலை, ராகமை போதனா வைத்தியசாலை, புத்தளம் தள வைத்தியசாலை என்பற்றிலும் கடமையாற்றியுள்ளார். இவர் கல்முனை உவெஸ்லி, கல்முனை ஸாஹிராக் கல்லூரி என்பவற்றின் பழைய மாணவருமாவார்.

**ஏ.ஆர்.எம். ஜிப்ரி**
சிரேஷ்ட அறிவிப்பாளர்,
அதிபர்.